ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 01 | 16-06-2003 | திங்கட்கிழமை | ஓசை 118



அச்சகங்கள் அலுவலகங்கள் மாணவர்களுக்கு

சாணக்கியா

அச்சுப் பொருட்கள்

காகிதாதிகள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.


# மௌனம் வேண்டாம், விட்டுக் கொடுப்பைக் கைவிடுங்கள்

## தேசியத் தலைவரிடம் முல்லை. கரையோர மக்கள் கோரிக்கை

நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட கடலோரப் பிரதேச மக்கள் "மௌனம் வேண்டாம், விட்டுக் கொடுப்பைக் கைவிடுங்கள்" என தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் கோரியுள்ளனர்.

அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மனங்களெல்லாம் நீக்கமற நிறைந்து நிற்கும் எம் தலைவனே, நிதானத்தோடு உங்களிடம் எங்கள் வேண்டுதலை விடுகின்றோம்.

இருபத்தியேழு ஆண்டுகால விடுதலைப்போரில் எமது மக்கள் பட்ட துயரத்திற்கும், சுமந்த துன்பங்களுக்கும், ஓய்வு கொடுக்க நீங்கள் விரும்பியதை நாங்கள் அறிவோம்.

பதினேழாயிரத்து எண்ணூறுக்கு மேற்பட்ட மாவீரர்களின் இலட்சியக் கனவுகளையும், எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் உயிர்களையும், இவர்கள் சிந்திய குருதியையும், கண்ணீரையும் உங்கள் உள்ளம் தாங்கி உறுதியோடிருப்பதையும் நாங்கள் அறிவோம்.

எமது மக்களின் அமைதியான, நிம்மதியான, சுதந்திரமான வாழ்வுக்காய் நோர்வேயின் அனுசரணையோடு அரசியல் தீர்வொன்றைக் காணமுடியுமா என பதினாறு மாதங்களாய் முயன்றதனையும் நாங்கள் அறிவோம்.

புரிந்துணர்வுடன்படிக்கை மூலம் உலக நாடுகளுக்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

### தடயத்தை மறைக்கும் உத்தியைக் கையாண்டு

# யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை சிறிலங்கா கடற்படை ஏமாற்றியுள்ளது

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

**"சிறிலங்காக் கடற்படையினர் தடயத்தை மறைக்கும் ஓர் உத்தியைக் கையாண்டு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை ஏமாற்றியிருக்கிறார்கள்" என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:14-06-2003 காலை இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாகவும் அதுகுறித்து உங்களுக்கு நாங்கள் அனுப்பிய தகவல்களின் பின்னர் ஏற்பட்ட திருப்பங்கள் தொடர்பாகவும் சிறிலங்காக் கடற்படையினரின் சட்ட விரோதமான நடவடிக்கைகள் குறித்த தரவுகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறோம்.

கிழக்குக்கரையிலிருந்த 265 கடல்மைல் தொலைவில் (1147N. 8431E) தூரத்தில் இக்கப்பல் சிறிலங்காக் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு பரிசோதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டது. காலை7மணியளவில் இக்கோரிக்கை விடப்பட்டபொழுது அதற்கு இணங்கிய கப்பலின் கப்டன் இத்தகவலை சமாதானச் செயலகத்திற்கு அறிவித்திருந்தார். உடனடியாக இது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# சம்பவங்கள் நடந்து முடியும்வரை கடற்படை எமக்குத் தகவல் தரவில்லை!

### கண்காணிப்புக்குழு அதிகாரி

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் கப்பல் குறித்து சம்பவம் நடந்து முடியும் வரை சிறிலங்காக் கடற்படை எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி அக்னஸ் பிறகர் டோர்ரயர் கூறியுள்ளார்.

இவ்வாறு ஏன் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கவில்லை என அவரிடம் கேட்டபோது, ஏன் என்று சிறிலங்காக் கடற்படையிடம் தான் கேட்க வேண்டும். அவர்கள் சார்பில் நாங்கள் பதில் கூறமுடியாது என்றார்.

இந்தச் சம்பவம் பற்றி இரண்டு தரப்பினரும் வெவ்வேறு விதமாகக் கூறுகின்றனர். விடுதலைப்புலிகள் இந்தச் சம்பவம் முல்லைத்தீவிற்குக் கிழக்கே 266 கடல் மைல்களுக்கப்பால் சர்வதேச கடற்பரப்பில் நிகழ்ந்ததாகக் கூறுகின்றனர். கடற்படையோ இந்தச் சம்பவம் 110 கடல் மைல்களுக்கப்பால் நடந்ததாகக் கூறுகிறது. சம்பவம் நடந்த இடத்தில் நாங்கள் இருக்கவில்லை இருந்திருக்கவும் முடியாது என்பதால் நாங்கள் மிக மோசமானதொரு நிலையில் வைக்கப்பட்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவிலிருந்து 266 கடல் மைல்களுக்கப்பால் விடுதலைப்புலி

(08ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் தொடர்பான அறிக்கை கண்காணிப்புக்குழு வெளியிடும்

சிறிலங்காக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கப்பல் தொடர்பான அறிக்கையொன்றை நாளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான தகவல்களைப் பெற கண்காணிப்புக் குழுவினர் திருகோணமலை சென்றுள்ளனர். இக்கப்பல் தொடர்பாக விடுதலைப் புலிகளிடமிருந்தும் கடற்படையினரிடமிருந்தும் மேலதிக தகவல்களைச் சேகரித்து வருவதாக கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# புலிகளின் கப்பல் போக்குவரத்தை கண்காணிக்க இந்திய உதவி கோரல்

(லண்டன்)

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளது எண்ணெய்த்தாங்கிக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து சிறிலங்கா அரசு இந்தியாவிடம் உடனடி உதவியை நாடியுள்ளதாக இந்திய செய்திகள் கூறுகின்றன. சிறிலங்கா அரசு இந்திய கடற்படையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிகாரியின் உதவியையும் நாடியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து விடுதலைப்புலிகளின் கப்பல் போக்குவரத்தைக் கண்காணிக்க இந்திய விரைவுந்து ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கல்லடியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-கல்லடி திருச்செந்தூர் வீதியில் வைத்து நேற்று முற்பகல் 11.00 மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பொன்னையா இராமச்சந்திரன் (வயது-42) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளவராவார்.

வாகரையைச் சேர்ந்த இவர் நீண்ட நாட்களுக்கு முன் அங்கிருந்து வெளியேறி புளொட் அமைப்பில் இணைந்திருந்து பின்னர் ஈ.பி.டி.பி அமைப்பில் இணைந்து செயற்பட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிக்க வடமராட்சி கிழக்கில் ஏற்பாடு

வடமராட்சி கிழக்கில் வரும் 5ஆம் திகதி கரும்புலிகள் தினத்தை எழுச்சியோடு அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை இத்தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை,கவிதை போட்டிகளும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளுடன் நாடகப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. அப்போது கடலில் ஆண்கள்,பெண்களுக்கான நீச்சல் போட்டி என்பனவும் இடம் பெறவுள்ளன.

# போராளியின் பையை பரிசோதிக்க ராணுவம் முயன்றதால் எழுந்த சர்ச்சை

### பண்ணாகத்தில் ஏற்பட்ட பதற்றம்

(வடமராட்சி)

சித்தங்கேணி பண்ணாகம் வீதியூடாகப் பயணித்த விடுதலைப்புலிகளின் அரசியல் பணிப்போராளி ஒருவர் தன்னுடன் எடுத்துச் சென்றுகொண்டிருந்த பொதியினைச் சோதிக்க படையினர் மேற்கொண்ட முயற்சியை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் பண்ணாகம் வீதியூடாக பயணித்தவிடுதலைப் புலிகளின் அரசியல்பணிப்போராளியை வழிமறித்த படையினர் அந்தப் போராளி கைவசம் எடுத்துச் சென்ற பொதியை சோதனையிட முற்பட்டனர். அப்போது அதனை அனுமதிக்க மறுத்த அரசியல் பணிப்போராளி சர்வதேச போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினர் மற்றும் பொலிசார் முன்னிலையிலேயே தனது பயணப்பையை பரிசோதிக்க அனுமதிக்க முடியும் என தெரிவித்தார். இதனையடுத்து போராளியின்

(08ஆம் பக்கம் பார்க்க)

### வரிவிளம்பரம்.

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை,சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி.

(3275)


## சுபத்திரன் கொலை விவகாரம்
# வேம்படி மகளிர் கல்லூரி காவலாளிகள் இருவர் பொலிசாரினால் கைது

ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதரணியின் யாழ். அமைப்பாளர் சுபத்திரன் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக வேம்படி மகளிர் கல்லூரியின் இரு காவலாளிகள் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வேம்படி மகளிர் கல்லூரியின் மூன்றாவது மாடியில் தங்கியிருந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான தடயம் கிடைத்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இங்கிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலக கட்டட மேல் தளப்பகுதியை இலகுவாக பார்க்க முடியும் எனவும் அங்கிருந்த யன்னல் ஒன்றின் ஓரமாக மணல் நிரப்பப்பட்ட சாக்கு ஒன்று மேசை மீது வைக்கப்பட்டிருந்தது என்றும், அரையடி அகலத்திற்கு யன்னலுக்கு அடிக்கப்பட்டிருந்த வலை வெட்டப்பட்டிருந்ததாகவும், குளிர்பானம், மிக்சர், பிஸ்கட் என்பன அங்கு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகம் காணப்படுகிறது. எனவே முதல் நாள் இரவு இங்கு தங்கியிருந்து காலை சுபத்திரன் மீது குறிபார்த்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து துப்பாக்கிச்சூடு நடத்தியவரை காவலாளிகளுக்கு தெரிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் காவலாளிகளான முத்துக்குமாரு சந்திரகுமாரன், மாணிக்கம் இளங்குமரன் ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச் சன்னங்கள் சுபத்திரனின் சுவாசக் குழாயினையும், விலா எலும்பினையும் துளைத்து மறுபுறத்தால் வெளியேறியுள்ளதாக மந்திகை சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வருடாந்த விளையாட்டு விழா

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா இவ்வாண்டும் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி குமுளமுனை மாவீரர் முன்பள்ளியினதும், 22ஆம்திகதி ஆறுமுகத்தான்குளம் சத்தியன் முன்பள்ளியினதும் 24ஆம்திகதி தங்கபுரம் வில்வன் முன்பள்ளி, தாமரைக்கேணி முரளி முன்பள்ளிகளினதும், 28ஆம் திகதி முறிப்பு பற்றீசியா முன்பள்ளியினதும் சிறார்களுக்கான விளையாட்டு விழா நடைபெறவுள்ளதாக நிறுவன அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## மென்பந்துப் போட்டியில்
# கிளி. மத்திய கல்லூரி, கிளி ம.வி மாகாண மட்டத்திற்குத் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலைகளுக்கிடையிலான வட-கிழக்கு மாகாணமட்ட கிரிக்கெட் மென்பந்துப் போட்டியில் பங்கு பற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகியன தகுதிபெற்றுள்ளன.

கிளி. வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற அரையிறுதிப் போட்டியொன்றில் கிளி. மத்திய கல்லூரி முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தை வெற்றி கொண்டது மற்றொரு அரையிறுதிப் போட்டியில் கிளி.மகாவித்தியாலயம் தருமபுரம் மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்றது. அதனைத்தொடர்ந்து நேற்று நடைபெற்ற வலயமட்ட இறுதிப்போட்டியில் கிளி.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கிளி.பாரதிவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 6இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளி. மகாவித்தியாலய அணியினால் 7இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் செ.தனபாலன், எஸ். சசீசராஜ் ஆகியோர் கடமையாற்றினர், மாகாணமட்டபோட்டி எதிர்வரும் 23ஆம் திகதி திருமலையில் நடைபெறவுள்ளது. மாகாணமட்ட வலைப் பந்தாட்டப்போட்டி இன்றுமுதல் வவுனியாவில் நடைபெறும். (சோ)

# பாதுகாப்பற்ற பகுதியில் விளையும் உப்பைப் பாவிப்பதை தவிர்க்குக
## உப்பு உற்பத்தி நிறுவனம் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பகுதிகளில் பாதுகாப்பற்ற கடலோரப் பகுதிகளில் விளையும் உப்பை பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பற்ற தரவைகளில் உப்பு விளைய ஆரம்பித்துள்ளதால் மக்கள் இவ் உப்பினை பயன்படுத்த வேண்டாம் என்றும் அயடின் இல்லாத இவ் உப்பின் மூலம் ஆபத்தான நோய்கள் ஏற்படக் கூடும் என்றும் இதனைக் கருத்திற் கொண்டு மக்கள் விழிப்பாக இருப்பதோடு பாதுகாப்பற்ற பகுதிகளில் விளையும் உப்பினை அள்ளுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் ஆனையிறவு உப்பு உற்பத்திக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (பா)

# வாழைச்சேனைச் சந்தைப் பகுதியில் கிரனைட் வீச்சில் 7 பேர் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை சந்தையிலுள்ள இறைச்சி விற்பனை நிலையத்திற்கருகில் நேற்று கிரனைட் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இனந்தெரியாதோர் நடத்திய இத் தாக்குதலில் ஏழு முஸ்லிங்கள் காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து நகரில் நின்ற மக்கள் நாலா புறமும் சிதறி ஓடினர். வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. படையினரும், பொலிசாரும் நகரில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# மன்னாரில் மின்சாரம் தாக்கி பொலிசார் ஒருவர் மரணம்

மின்சாரம் தாக்கியதில் ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணமானார். கடந்த வியாழக் கிழமை இரவு 7.30 மணியளவில் மன்னாரில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மன்னார் பொலிஸ் நிலையத் திற்கு அருகில் உள்ள மைதானத்தில் அறுந்துகிடந்த மின்விநியோகக் கம்பியை தவறுதலாகத் தொட்டதால் இவர் மயக்கமடைந்தார். சுயநினைவற்ற நிலையில் காணப்பட்ட இவர் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது மரணமானார். பதுளையைச் சேர்ந்த எம். சம்சுதீன் (வயது 28) என்பவரே மரணமடைந்தவராவார்.

# போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உளவியல் கல்வி

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பாடசாலைகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு உளவியல் சார்ந்த கல்வி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

போரின் அனர்த்தங்களால் தாய், தந்தையரை இழந்த, போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை பாடசாலைகளில் இனங்கண்டு அவர்களுக்கான உளவியல் சார்ந்த கல்வியூட்டல் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது. (பா)

## மந்திகை வைத்தியசாலையில்
# உலக சுகாதார நிறுவனத்தின் வைத்திய சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மந்திகை ஆதார வைத்திய சாலையில் உலக சுகாதார நிறுவனம் அடுத்த வாரம் முதல் வைத்திய சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிறுவனத்தின் சத்திரசிகிச்சை நிபுணர்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த 16 வருடங்களாக பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் அங்கு தங்கி இருந்து சிகிச்சை மேற்கொண்டு வந்தனர். இக்குழுவினர் தமது சேவையை முடித்துக் கொண்டு கடந்த வாரம் நாடுதிரும்பியுள்ளதையடுத்தே உலக சுகாதார நிறுவன வைத்தியர்கள் இங்கு சேவையாற்றவுள்ளனர்.

# சூழல் பாதுகாப்பு வாரத்தில் வீட்டுத் தரிசிப்பு நடவடிக்கை

உலக சூழல் பாதுகாப்பு வாரத்தில் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் முன்பள்ளி ஆசிரியர்களும் நிறுவனத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களும் இணைந்து வீட்டுத்தரிசிப்பு செய்து சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்துரைகளையும் வழங்கி வருகின்றனர்.

மேற்படி நிறுவனத்தின் ஆளுகைக்குட்பட்ட குமுளமுனை, பூதன் வயல், குமாரபுரம், தண்ணிமுறிப்பு, புதறிகுடா, முள்ளியவளை மத்தி/ தெற்கு ஆகிய பகுதிகளிலேயே வீட்டுத்தரிசிப்பு செய்து சூழல் பாதுகாப்புத் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கி, கருத்துரைகளையும் வழங்கி வருகின்றனர். (ஆ)


### செய்தித் தாள் விற்பனையாளர்களுக்கு

வீரகேசரி வார வெளியீடு, மட்டு நகரின் 'தமிழ் அலை' பத்திரிகை கழிவுடன் பெற அருகில் உள்ள அறிவமுது பொத்தக சாலையுடன் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர்,**
**அறிவமுது நிறுவனம்.**

(சி-8203)

### இன்று முதல் மகத்தான ஆரம்பம்

பொன் வீடியோ & ஸ்ருடியோ நிறுவனம் வாடிக்கையாளர்களின் அதிவேக தேவை கருதி இப்போது,

**பொன் கவின் கலர் லாப் வீடியோ அன் ஸ்ருடியோ**

என்று நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது

உங்கள் புகைப்படச் சுருள்களை மிக இலகுவாக கழுவிக் கொள்ளும் விரைவு சேவை

4R படங்கள் 10/= ரூபாய் மட்டுமே. இது குறிப்பிட்ட காலம் வரை

(குளிரூட்டப்பட்டுள்ளது)

தனியார் பஸ்தரிப்பு நிலையம், வவுனியா.

(சி-8202)


# சமாதான முயற்சிகளை சிறிலங்கா அரசு தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும்
## இல. தேசிய வர்த்தக சம்மேளனம் கோரல்

சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமென்று இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அசோகா குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்காக டோக்கியோவில் கிடைத்த நிதி உதவியைப் பயன்படுத்த வேண்டும் வடக்கு கிழக்குப் பகுதிகளில், உடனடி அபிவிருத்தித்திட்டங்களை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்வதன் ஊடாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடக்குகிழக்கில் செயற்படுத்தப்படவேண்டிய உடனடித்திட்டங்கள் குறித்தும் நிதி செயற்படுத்தப்படவேண்டிய விதம் பற்றியும் இலங்கைத் தேசிய வர்த்தக சம்மேளனம், தேசிய கைத்தொழில் சம்மேளனம் என்பன இணைந்து கையெழுத்திட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி செயற்பாடுகள் இடம்பெறும் என்று தான் நம்புவதாகவும் கெடுபிடியற்ற ஒரு சிறந்த கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்றும் குணவர்த்தன கேட்டுக்கொண்டுள்ளார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க பாராளு.-இல் பிரேரணை

வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து கடற்றொழிலில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கவனஈர்ப்புப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் கூறியுள்ளார்.

பருத்தித்துறைக்கு விஜயம் செய்த அமைச்சர், அப்பகுதி கடற்றொழிலாளரது குறைபாடுகளைக் கேட்டறிந்தபோது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களது ரோலர் வடபகுதி கடற்பகுதிக்குள் வருவதால் தமது தொழில் பாதிக்கப்படுவதோடு தொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப்படுவதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


### வவுனியா மாவட்ட நீதிமன்றம்

வழ.இல 659: D

வழக்காளி:
தேவகி இலங்கநாதன்,
84, குருமன்காடு,
வவுனியா.

எதிர்:
சுப்பிரமணியம் இலங்கநாதன்
16/20, வீடமைப்புத்திட்டம்,
இரணைமடு, கிளிநொச்சி.

மேற்குறிப்பிட்ட எதிராளிக்கு மேற்குறித்த வழக்கு 2003 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிமன்றில் கூப்பிடப்படும் என்பதை அறியத் தருகிறேன். அன்றைய தினம் நீதிமன்றில் பிரசன்னமாய் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்.

**பதிவாளர்,**
**வரைபு,**
**அன்ரன் புனிதநாயகம்,**
**மனுதாரர் சட்டத்தரணி.**

(3233)



இந்தோனேசியாவில் இராணுவத் தாக்குதல்களால் இடம் பெயர்ந்துள்ள ஆஷே மாகாண மக்கள்

# பிரிட்டனில் புகலிடம் கோருவோருக்கு குரோசியாவில் இரகசிய தடுப்பு முகாம்!

## -பத்திரிகை ஒன்று திடுக்கிடும் தகவல்

(லண்டன்)

பிரிட்டனில் புகலிடம் கோரும் 800 வெளிநாட்டவர்கள் தங்குவதற்கென குரோசியாவில் இரகசிய தடுப்பு முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக பிரிட்டிஷ் பத்திரிகையான 'ஒவ்ப்சேபர்' செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்திக் குறிப்புத் தொடர்பாக பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவலகத்திடம் கேட்கப்பட்ட போது இத்தகைய தகவல் பற்றித் தங்களுக்குத் தெரியாதெனப் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆனால் குரோசியா கரையோரப் பகுதியில் தற்போது பயன்படுத்தப் படாமலிருக்கும் இராணுவத் தளம் ஒன்றில் இம்முகாம் அமைக்கப்பட்டு வருவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

புகலிடம் கோருவோரை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வெளியில் தங்க வைப்பதற்கான பிரிட்டிஷ் திட்டம் எதனையும் ஐரோப்பிய ஆணைக்குழு இதுவரையிலும் அங்கீகரிக்காத நிலையில் குரோசியா முகாம் இப்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளதெனப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

# பேச்சுக்கள் ஆரம்பம்!

இஸ்ரேலிய, பாலஸ்தீன அதிகாரிகள் அமெரிக்காவின் வற்புறுத்தலின் பெயரில் நேற்று முன்தினம் உயர் மட்டப் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். கடந்த ஒரு வாரகாலமாக 50 பேரைப் பலி கொண்ட வன்செயல்கள் காரணமாக அமெரிக்கா முன்வைத்த சமாதானத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து, இரு தரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அமெரிக்கா வற்புறுத்தியிருந்தது.

# சதாம் ஆதரவாளர்களை ஒடுக்குவதில் அமெரிக்க, பிரிட்டன் படைகள் தீவிர முயற்சி!

## -அன்னியப் படைகளை வெளியேறவும் எச்சரிக்கை

**ஈராக்கிலுள்ள சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்க மற்றும் பிரிட்டன் கூட்டுப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 70 பேர் கொல்லப்பட்டு விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஈராக்கிலுள்ள அன்னியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் இல்லையெனில் கடும்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் சதாம் ஹுசைன் வெளியிட்டுள்ள கடிதமொன்றை அவரது கையெழுத்துடன் பிரிட்டனிலிருந்து வெளிவரும் செய்தித் தாளொன்று பிரசுரித்துள்ளது.

இதனையடுத்து ஈராக்கிலுள்ள சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்க கூட்டணிப் படையினர் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வடக்குப் பாக்தாத் பகுதியிலுள்ள புளியா, பலாஹ் பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களது பயிற்சி முகாம் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க படைத் தரப்புக் கூறுகிறது. இதனையடுத்து இங்கு தரைப்படையும், வான்படையும் தாக்குதல் நடத்தின.இதில் 70 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. அதேவேளை, சதாமின் ஆதரவாளர்களும் அமெரிக்க படையினர் மீது தீவிர தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க அமெரிக்க கூட்டுப் படைகளின் நடவடிக்கைகளுக்கு உள்ளூர் மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். தங்கள் வீடுகள் சூறையாடப்படுவதோடு உள்ளூர் வாசிகள் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இந்தத் தேடுதல் வேட்டையில் அப்பாவி மக்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அமெரிக்க இராணுவத் தரப்பு தெரிவிக்கின்றது.



நோம்பனில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரைக் கைது செய்யும் கம்போடிய இராணுவப் பொலிசார் அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவலின் விஜயத்தைக் கண்டித்து ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

# உறவை மேம்படுத்துவதில் மீண்டும் நெருக்கடி; முஷாரவ் கருத்துக்கு இந்தியா ஆட்சேபம்!

(புதுடில்லி)

கார்கில் பற்றியும் காஷ்மீர் பிரச்சினை குறித்தும் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஷாரவ் கூறியிருப்பதற்கு புதுடில்லி கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

ஜம்முகாஷ்மீரில் பாகிஸ்தான் தனது நோக்கத்தை அடைய கார்கில் போன்றதொரு ராணுவ நடவடிக்கையை முஷாரவ் நியாயப் படுத்திப் பேசியிருப்பது அமைதி வழியில் இல்லாத பாகிஸ்தானின் நோக்கத்திற்கு ஒரு சமிக்ஞை என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இது பிரதமர் வாஜ்பாயின் அமைதி முயற்சிகளைப் பாதிக்கக் கூடியது என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

முஷாரவ் தனியார் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் கார்கில் போர் ஒரு தவறு அல்ல. மீண்டும் அது போல் போர் நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை மறுப்பதற்கில்லை என்று கூறினார்.

இவ் அறிக்கை மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளதாக வெளியுறவு அமைச்சக அறிக்கை கூறியுள்ளது.

இதற்கிடையில் இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையின்மையே காணப்படுவதாக முஷாரவ் தெரிவித்துள்ளார்.

இந்தியா கூறியிருப்பது போல் பொருளாதார வர்த்தகத் துறைகளில் மேற்கொண்டு நடவடிக்கைகளுக்கு அவர் விருப்பமின்மையும் தெரிவித்துள்ளார்.



ஒருமாதமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமது தலைவரான சேக் அப்துல்காலெத் கல்குமோரியை விடுவிக்கக் கோரி அமெரிக்கப் படை வீரரைச் சூழ்ந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்யும் ஈராக்கியர்.

# - ஆசிய, பசுபிக் மாநாட்டில்- மியன்மார், வடகொரிய நிலைமைகள் ஆராய முடிவு!

ஆசிய பசுபிக் பிராந்திய வெளிவிவகார அமைச்சர்கள் இவ்வாரம் சந்திக்கும் போது மியன்மாரில் சனநாயக போராட்டத்தலைவி அங்சான் சுகி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை வட கொரியாவின் அணுவாயுத திட்டம் ஆகியன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஆசியான் ஸ்தாபனத்தின் வருடாந்த பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் கலந்து கொள்ளவுள்ளார். மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவி இராணுவ அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து அமெரிக்கா ஏற்கனவே விசனம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில் லையென்ற கோட்பாட்டை ஆசியான் ஸ்தாபனம் கொண்டுள்ள போதிலும், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி பொதுவாக ஆராயப்படும் போது இவ் விவகாரங்கள் அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற அமைப்பில அங்கத்துவம் பெறாத நாடுகளினால் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்குக்கரை நகரான நேப்ளஸிக்குச் செல்வதற்கு ஹவாரா சோதனைச்சாவடியில் தமது ஆளடையாள ஆவணங்களை மீளப் பெறக் காத்திருக்கும் பாலஸ்தீனப் பெண்கள்



# வெட்டுக்கிளிகள் படையெடுப்பு 50 லட்சம் ஏக்கர் பயிர்கள் நாசம்!

(வொஷிங்டன்)

அமெரிக்க நாட்டின் நிவேடா என்ற பகுதியிலுள்ள விவசாயிகள் வெட்டுக்கிளி படையெடுப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு அமெரிக்காவிலுள்ள நிவேடா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெட்டுக்கிளிக் கூட்டங்கள் அலையலையாகப் படையெடுத்து வருவதால் அங்குள்ள விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அங்குள்ள நிலங்களிலும வீடுகளிலும் கூட்டம் கூட்டமாகக் காணப்படும் இந்த வெட்டுக்கிளிகள் சுமார் 50 இலட்சம் ஏக்கர் நிலங்களில் விளைந்துள்ள பயிர்களைச் சேதப்படுத்தியுள்ளன.

இந்த வெட்டுக் கிளிகளை அழிக்க அமெரிக்க விவசாயத் துறை, விமானங்கள் வானில் பறந்தபடி பூச்சி மருந்துகளை விசிறுகின்றன.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இதேபோன்று வெட்டுக் கிளிகள் படையெடுப்பு இப் பகுதியில் நிகழ்ந்ததாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கடற்படையின் போர் நிறுத்த மீறல்களைத் தடுக்க கண்காணிப்புக்குழு உருப்படியாக செயற்படுவதில்லை!

## யாழ். வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் கண்டனம்

**கடற்பரப்பில் பல போர் நிறுத்த மீறல் சம்பவங்களில் சிறிலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறையிட்டுள்ள போதிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு யாழ்.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

சர்வதேச கடற்பரப்பில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளின் எரிபொருள் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தினைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

திருகோணமலைக்கு 266 கடல்மைல் தொலைவில் சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக்கொண்டிருந்த புலிகளின் கப்பலை சிறிலங்கா கடற்படையினர் பலவந்தமாக வழிமறித்துத் தாக்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து கப்பலிலிருந்த 12 மாலுமிகளும் உயிர் காக்கும் அங்கிகளுடன் கடலில் குதித்துள்ளனர்.

தமது உயிரை பாதுகாக்கக் கடலில் குதித்த போராளிகளை கடற்படையினர் கைதுசெய்து தமது கடற்படைக்கலத்தில் ஏற்றிச்சென்றுள்ளனர்.

தொடர்ந்து புலிகளின் கப்பலின் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தி அதனை மூழ்கடித்துள்ளனர். இச்செயலை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கண்டிக்கிறது.

கடற்பரப்பில் பல போர்நிறுத்த மீறல் சம்பவங்களில் சிறிலங்காப்படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு முறையிட்டுள்ள போதிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுப்பதாகத் தெரியவில்லை.


புலிகள் கடற்பிராந்தியத்தில் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சிக்கல்கள் ஏற்பட்டால் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் முன்நிலையில் தான் பேசித்தீர்க்க வேண்டுமென இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுதியளித்திருந்தது. ஆனால் இன்று ஏற்பட்டுள்ள இந்நிலை மிகவும் ஆத்திரமூட்டும் செயலாக அமைந்துள்ளது.

சமாதானத்திற்காக பொறுமை காக்கும் புலிகளைச் சீண்டுவதன் மூலம் சமாதானச் சூழ்நிலையை தகர்த்தெறிய முற்படும் அரச படைகளின் சமாதான விரோதப் போக்கைத் தமிழர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இத்தாக்குதல் சம்பவத்தினால் எமது மக்கள் கொதித்துப் போயுள்ளனர். அமைதி காக்கும் விடுதலைப் புலிகளை சீண்டி மீண்டும் ஒரு போருக்கு தூபமிடும் சமாதான விரோத சக்திகளுக்கு எதிராக மக்கள் போராடவேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை இச்சம்பவம் தெளிவாக்கியுள்ளது.

சிறிலங்காக் கடற்படையினரால கைது செய்யப்பட்ட 12 போராளிகளின் உயிர் பாதுகாப்பிற்குரிய உத்தரவாதம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும், சிறிலங்கா அரசிற்குமே சார்ந்தது. இச்சம்பவத்தின் மூலம் சிறிலங்கா அரசின் சமாதான முயற்சி குறித்து தமிழ்மக்கள் கொண்டுள்ள சந்தேகத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டுமென அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மரக்கன்று வழங்கல்

பூநகரி மட்டுவில் நாடு மேற்குக் கிராம மக்களுக்கு தபா.மே நிறுவனத்தால் சூழல் பாதுகாப்பு வாரத்தில் பயன்தரும் மரக்கன்றுகளான தேசி, பலா, கயூ என்பன வழங்கப்பட்டுள்ளது. பூநகரி கடலோரப் பிரதேசங்களில் மணல் மண் அகழ்ந்து ஏற்றுவதை நிறுத்துமாறும் கண்டல் தாவரங்களை வளர்த்து மண் அரிப்பை தடைசெய்ய ஒத்துழைக்குமாறும் அப்பகுதி மக்களை அவர்கள் கேட்டுள்ளனர்.



சோதி

கோணாவில் – கந்தபுரம் பிரதான வீதியிலுள்ள மரப்பாலத்தின் ஒரு பக்க கரையிலுள்ள தண்டவாளம் அகற்றப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளதைப் படத்தில் காணலாம்

## வித்தியானந்தாக்கல்லூரி மாணவர் இருபது பேர் பல்கலைக்குத் தெரிவு

(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று 20 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி யுள்ளனர்

இம்மாணவர்களில் மருத்துவத் துறைக்கு மூன்று மாணவர்களும் பொறியியல் துறைக்கு இரண்டு மாணவர்களும் முகாமைத்துவத்துறைக்கு மூன்று மாணவர்களும் ஏனைய மாணவர்கள் பல்வேறு துறைகளுக்கும் தெரிவாகியுள்ளதாக கல்லூரி அதிபர் கே.பி. கணேஸ் தெரிவித்தார். (ஆ)

## சமாந்தரமாக பயணித்த மூவர் மீது நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

பிரதான வீதியில் சமாந்தரமாக மூன்று துவிச்சக்கர வண்டிகளில் பயணித்த நபர்களை தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல் துறையினர் கைதுசெய்து நிதிமன்றில் முற்படுத்திய பொழுது மேற்படி மூவருக்கும் தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஒரு நாள் நீதிமன்றம் கலையும்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி பிரதான வீதியில் சமாந்தரமாக மூன்று துவிச்சக்கர வண்டிகளில் பயணித்த நபர்களை வீதிப்போக்குவரத்து காவல்துறையினர் கைது செய்து கிளிமாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபொழுது கிளிமாவட்ட நீதியாளர் பிரபுராஜ் இந்நபர்களுக்கு மேற்படித் தீர்ப்பை வழங்கினார். (சோ)

## கருங்குளவிகள் கொட்டி இருநாட்களில் மூவர் வைத்தியசாலையில் அனுமதி!

(அலுவலக செய்தியாளர்)

கருங்குளவி கொட்டியதில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்,

மேற்படி சம்பவம் கடந்த 13ஆம்,14ஆம்திகதிகளில் அக்கராயன் - கோணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோணாவில் பகுதியைச் சேர்ந்த தம்பித்துரை (வயது 40), சசிதரன் (வயது 20) ஆகிய இருவரும் கடந்த 13ஆம் திகதியன்று குளவிகொட்டியதன் விளைவாக கிளி.மாவட்ட அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

அதேபோன்று அக்கராயனைச் சேர்ந்த சிலுவைராசா (வயது 49) என்பவர் கடந்த 14ஆம் திகதியன்று கருங்குளவி கடுமையாகத் தலையில் கொட்டியதன் விளைவாக கிளி. அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தற்போது வீசிவரும் கடும் காற்றுக்காரணமாக கருங்குளவிக்கூடுகள் மரங்களிலிருந்து உடைந்துவிழுவதன் காரணத்தினாலேயே இப்படியான சம்பவங்கள் இடம் பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது. (சோ)

## மக்களை மீள் குடியமர்த்தல் குறித்து மன்னார் கச்சேரியில் கூடி ஆராய்வு

(மன்னார்)

மக்களை மீளக்குடியமர்த்தல் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் கச்சேரியில் மாநாடு இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்பிலிருந்து வருகை தந்த பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளரும், வன்னிக் கட்டளைத் தளபதியும், மன்னார் மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் அமிர்தாப் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமை தாங்கியுள்ளார். முக்கியமாக மக்களை மீளக்குடியமர்த்தும் இடங்களை இக்குழுவினர் இனம் கண்டு இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளையும், வசதிகளையும் முழுமையாக செய்து கொடுப்பதாகவும், மேலதிக பாதுகாப்பமைச்சின் செயலாளர் தான் கொழும்பு சென்று ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் கதைத்து உடன் ஆவன செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார். (மி)

## டென்மார்க் பல்கலை. குழு மக்களுடன் சந்தித்துப் பேச்சு

(மிராண்டா)

பேசாலையிலுள்ள அகதி முகாமை நேற்று முன்தினம் டென்மார்க் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த சமூக சேவைப் பிரிவினர் அங்குள்ள மக்களை இனம் கண்டு அவர்களின் குறைகள் தேவைகள் பற்றிய ஆய்வினை நடாத்தியுள்ளனர்.

அத்துடன் மக்களுக்கு தேவையான விடயங்களைக் கண்டறிந்து தாங்கள் உரிய இடங்களுக்கு அறிவித்து இதற்கு முடிவெடுப்பதாகக் கூறியுள்ளனர். (மி)

## அரசாங்க அச்சக ஊழியர் தாக்குதல்; அரசுமீது உரிமை மீறல்வழக்கு!

பொறளையிலுள்ள அரசாங்க அச்சகத்தையும் ஊழியர்களையும் தாக்கியவர்கள் மீது சிறிலங்கா அரச நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மூன்று தொழிற்சங்கங்களும் நான்கு தனிநபர்களும் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். கடந்தமாதம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது மேலதிக அச்சகர் உட்பட அச்சக ஊழியர்கள் பலர் தாக்கப்பட்டனர். இதுதொடர்பாக பொலிசாரிடம் முறையிட்டும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் முறையிட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவத்தை அறிந்தபின்பும் அரசாங்க அச்சகர் சம்பவ இடத்திற்கு உடனடியாக செல்லவில்லை என மனுதாரர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

## அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் திறப்பது குறித்து பிரஸ்தாபம்!

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலும் மற்றைய மாவட்டங்களில் உள்ளது போன்று அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமையன்று கிளி.மாவட்ட அத்தியாவசியக் கூட்டத்தில் சபையினரால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை செவிமடுத்த கிளி அரச அதிபர் தி. இராசநாயகம் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரிடம் மேற்படி அலுவலகம் 1984இல் கிளிநொச்சியில் இயங்கிவந்தது எனவும், தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் கிளிநொச்சியிலும் மேற்படி அலுவலகம் இயங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கான விதப்புரைகளை பிரதம அஞ்சல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கும் வண்ணம் அஞ்சல் அத்தியட்சகரை வேண்டிக்கொண்டார். (சோ)

# உங்கள் எதிர்காலம் எங்கே இருக்கின்றது?



இன்றைய மனிதன் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குத் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அடிப்படை வசதிகளில் இருந்து ஆடம்பர மார்க்கங்கள்-அறிவியல் தொழில் நுட்பங்கள் வரை அனைத்தையும் சமாளிக்க முடியாமல் திணறுபவர்கள் பலர். இவை அனைத்துக்குமே பொதுவான ஒரே காரணம் இன்றைய மக்களின் வாழ்க்கைச் செலவின் உயர்வாகும்.

பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப தேவைகளும், வசதிகளும் பெருகி உள்ளன. அதே நேரத்தில் எமது அறிவியல், தொழில் நுட்பம் மூலம் பல கண்டுபிடிப்புகளின் மத்தியில் பல்வேறுபட்ட தேவைகள் பூர்த்தியாகி வருகின்றன. உதாரணமாக நவீன தொழிற்சாலைகள், போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள் போன்றவை குறிப்பிடத்தக்கது. இக்கண்டுபிடிப்புக்கள் யாவும் அந்நிய நாடுகளில் குறிப்பாக இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் எல்லா நாடுகளிலும் பல்கிப்பரவியதொன்றாக இன்று விளங்கக் காண்கின்றோம்.

இவற்றினால் பல நன்மைகளை அடைகின்றோம் என்றாலும், மறுபக்கத்தில் தீமைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பிரதி விளைவு ஒன்று உள்ளது. இவ் விளைவினைப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும். நாம் இன்னும் அடிப்படை வசதிகளில் கூட தன்னிறைவைக் காணாதவர்கள். அவ்வாறான நாம் எச் செயற்பாட்டிலும் அதிக கவனமுடையோராக இருப்பது அவசியம்.

"உதாரணமாக நல்லவீடு எப்படி ஒரு மனிதனுக்குத் தேவையோ அது போல நல்ல நாடும் தேவை" நல்லதொரு நாடாக இருக்க வேண்டுமானால் அந்நாடு வளமான நாடாக இருத்தல் அவசியம். இதில் எமது நாடு குறைவின்றி இருப்பதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியுற வேண்டியவர்கள். எனினும் இவ்வளங்கள் மனிதப்பயன்படுத்தலால் நாளடைவில் தீர்ந்து போகாமலும். ஏனைய செயற்பாடுகளினால் நலிந்து போகாமலும் பாதுகாப்பது ஒவ்வொரு வரதும் தலையாய கடமையாகும். அந்த வகையில் நாம் அனைவரும் இயற்கையாயோடு ஒட்டி வாழப் பழக்கப்பட்டவராயின் அதனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இன்றைய உயர் தொழில் நுட்பம் மூலம் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் உர இரசாயனங்கள், கிருமி நாசினிகள், களை நாசினிகள் என்பன நிலத்தையும், நிலத் தடி நீர்வளம் போன்றவற்றையும் பாதிப்படையச் செய்வதோடு மனிதனுக்கும் அதனை உட்கொள்ளும் பெருமளவு பிராணிகளுக்கும் பல தீங்கு விளைவிப்பதோடு சிலசந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களுக்கும் காரணமாகின்றன. அதே போன்று பிளாஸ்ரிக் இது இன்றைய பெரும் அபாயம்.

தற்காலச் சூழ்நிலையில் நாடெங்கிலும் புழக்கத்தில் இருக்கும் பிளாஸ்ரிக் தளபாடங்கள் , பாத்திரங்கள், விளையாட்டுப் பொருட்கள், பொலித்தீன் பைகள் உட்பட இன்னும் பல பாவனை உபகரணங்கள் எமது சூழலை எதிர்காலத்தில் என்ன செய்யப்போகின்றது என்பது அறியப்படாத ஒன்றாகும்.

மண்ணானது இயற்கைவளமாகும். இது பல்வேறுபட்ட பொருட்களை உக்கவைத்து அதில் உள்ள போசணைகளை தன்னில் தக்க வைத்துக்கொள்வதாகும். அவ்வாறு உக்காத பொருட்களை நாம் மண்ணுடன் சேர்க்கும் போது அவை மண்ணில் காணப்படும் கனியங்களுடன் தாக்கம் புரிந்து பல தீய விளைவுகளை உருவாக்குவதோடு, சூழலையும் அசுத்தப்படுத்திக் கொள்கின்றன.

பிளாஸ்ரிக்கானது மண்ணுடன் சேரும்போது அது உக்குவதில்லை. அதேபோல நீரிலும் கரைவதில்லை. எவ்வளவு காலம் சென்றாலும் பிளாஸ்ரிக் அழிவுறாதது. ஆனால் அதில் உள்ள இரசாயன மூலகங்கள் ஏனைய இயற்கை மூலகங்களுடன் தாக்கம் புரிந்துகொள்கின்றன.

**சூழல் பாதுகாப்புப் பகுதி**
**த.பொ.மே.நிறுவனம்**

இதனால் உயிரினங்களுக்குத் தீயவிளைவுகளை சூழலில் ஏற்படுத்துகின்றன. மண்ணுடன் சேரும்போது மண் பல்வேறு பட்ட மாற்றங் களுக்குள்ளாகி வளமற்றதாகிப் போய்விடுகிறது. நீருடன் சேரும்போது பல நீர் வாழ் உயிரினங்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத் தலாகின்றது. அதே போல பிளாஸ்ரிக்கை எரிக்கும் போதும் வளியுடன் சேர்ந்து வளியில் வேண்டப்படாத நச்சு மூலகங்கள் சேர்ந்து கொள் கின்றன.

எனவே பிளாஸ்ரிக், விவசாய கிருமிநாசினிகள் எமது வாழ்க்கைக்கு ஆகாத ஒன்று. இதற்குப் பதிலாக சேதனப் பசளைகளையும், உயிரியற் பீடைக்கட்டுப்பாடுகளையும், பிளாஸ்ரிக் பொருட்களுக்குப் பிரதியீடான மரத்தளபாடங்கள் பேப்பரால் தயாரிக்கப்பட்ட விளையாட்டுப்பொருட்கள் போன்றவற்றைப் பாவித்தல் வேண்டும்.

வாகனங்களால் வெளிவிடப்படும் புகையில் கூடியளவு காபன் நிறைந்திருப்பதால் வளியை மாசடையச் செய்கின்றன. மற்றும் விண்வெளி ஆராய்ச்சிகளும் வளிமண்டலத்தை மிக மோசமாகப் பாதிக்கச் செய்வனவாகும். விண்கலங்களால் வெளிவிடப்படும் புகையினால் வளிமண்டலமும் பூமியின் கவசமாகிய ஓசோன்படையும் பாதிப்படைகின்றது. ஓசோன் என்பது பூமியை சுற்றியுள்ள பாதுகாப்புக்கவசமாகும். இது சூரியனிலிருந்து பூமியை நோக்கி வரும்புற ஊதாக் கதிர்களை தடுத்து நிறுத்துகின்றது. விண்கலங்களினால் துளையிடப்படும் ஓசோன் கவசத்தில் இருந்து புற ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடைந்து பல புதிய தீங்குகளை பூமிவாழ் உயிரினங்களுக்கு ஏற்படுத்தும் அபாயம் உண்டு.

தொழிற்சாலைகள் பெரிதும் நீர்நிலைகளை அண்டி அமைந்திருப்பதால் அதாவது தொழிற்சாலைக்கழிவுகளை அகற்றுவதற்கு இலகுவாக ஆற்றங்கரைகளை அண்டியோ அல்லது கடற்கரைகளை அண்மித்தோ அமைந்துள்ளதால் நீர் வாழ் உயிரினங்களுக்கும், அந்த நீரை பெற்றுவளரும் தாவரங்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் பெரும் குந்தகத்தினை ஏற்படுத்துகிறது. இக்காரணங்களால் பூமியில் பல உயிரினங்கள் அருகி வருகின்றன.

அத்துடன் தாவரங்களை அழிப்பதும் சூழலைப் பாதிக்கின்றது, பெருகிவரும் சனத்தொகைக்கு வேண்டிய இருப்பிடத்தை அமைந்துக்கொள்வதற்காகவும், அடிப்படை வசதிகளை உருவாக்கிக்கொள்வதற்காகவும் இன்னும் பிற தேவைகளுக்காகவும் காடழிப்பு காலத்துக்குக் காலம் இடம்பெற்று வருகின்றது. இதனால் வளியில் உள்ள ஒட்சிசன் வாயுவின் வீதம் குறைவடைவதுடன் காபனீரொட்சைட்டின் வீதம் அதிகரிக்கின்றது. இதனால் வளி வெப்பமடைகிறது. வளிமண்டலத்தின் மழை வீழ்ச்சி குறைவடைகிறது. இச்செயற்பாட்டால் பூமி வரட்சிகாணும் அபாயமும், உயிரினங்களின் வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதும், மண்ணரிப்பு, மண்சரிவு ஏற்பட்டு வளங்கள் அற்றுப் போதலும், வனவிலங்குகளின் புகலிடம் அழிக்கப்படுவதால் அவை அழிந்து போகும் நிலையும் ஏற்படுகின்றது.

கடலில் பயணிக்கும் எண்ணெய்க் கப்பல்கள் மூழ்குவதாலும் சமுத்திரப் பரப்பு கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது. நீரிலும் கனம் குறைந்த எண்ணையானது நீர்ப்பரப்பில் படர்வதால் கடல் நீர் வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிப்படைகின்றன. இதனால் சமுத்திரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. அத்துடன் நவீன ஆயுத கண்டுபிடிப்புகளும், பரிசோதனைகளும் பாலைவனங்களிலும் சமுத்திரப்பரப்பிலும் நடைபெறுவதால் பல சூழல் இழப்புக்களும் அச்சுறுத்தல்களும் ஏற்படுகின்றன. நாடுகளுக்கிடையேயும் உள்நாடுகளிலும் இடம்பெறும் யுத்தங்களும் மனித சமூக அழிவுகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி சூழலை வெகுவாகப் பாதிப்படையச் செய்கின்றன. இவை பல ஆண்டுகளுக்கு மேலாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

எனவே இன்றைய மக்களாகிய நாங்கள் எமது எதிர்காலச் சந்ததியின் நலன் கருதி புரிந் துணர்வுடன் எமது சுற்றுப்புறச் சூழலைப் பாது காத்துக் கொள்வது அவசியமாகும். சுற்றுப் புறச் சூழலின் பாதுகாப்பின் விளைவாக நாம் சுத்தமான நீரையும், நிலத்தையும், வளியை யும் பெற்று நலமே வாழமுடியும். ■

# சூழல் தினத்தை முன்னிட்டு கொடிவழங்கல் ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

மாங்குளம் பிரதேசத்தில் சூழல் தினம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின், மாங்குளப் பிரதேச இணைப்பாளர் ஏ. ரவீந்திரன் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மங்கல விளக்கினை ஒலுமடு கமக்காரர் அமைப்புத் தலைவர் செ. பத்மநாதன் ஏற்றி வைக்க. மாங்குள பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ராகுலன் முதல் கொடி யினை வழங்க, மாங்குள கமக்காரர் அமைப்புத் தலைவர் ச.சிவானந்தம் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பிரதேச பொருண்மிய அறவீட்டாளர், கமக்காரர் அமைப்பு உறுப்பினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கோட்ட எழுச் சிப் பேரவை உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சிப் பேரவை உறுப்பினர்கள், மற்றும் போராளிகள், பொதுமக்கள் என பெரும்பாலானோர் கொடியினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிகழ்ச்சியினைச்சிறப்பித்தனர். (26)

# நியாப் திட்டத்திற்கான முன்னோடி நடவடிக்கைகள்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டுக்கான நியாப்திட்ட மூலம் புனரமைப்புச் செய்யதீர்மானிக்கப்பட்டுள்ள மயில்வாகனபுரம், தருமபுரம், மேற்குஆகிய இலக்குகிராமங்களில் நியாப் ஆரம்ப நிகழ்வுகளாக பங்கேற்பு கிராமிய கணிப்பீடு, பங்கேற்பு தேவைப்பகுப்பாய்வு ஆகிய இரு நிகழ்வுகளும் கடந்த வெள்ளியன்று மேற்படி கிராமங்களில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்விற்குக் கண்டாவளைப் பிரதேசசெயலர் பி.கா.மத்தியாஸ் நியாப்திட்ட உதவியாளர் ப. பரமேசுதயன், சமூக உணர்வூட்டல் இணைப்பாளர் இராஜன், கிராம சேவகர்கள், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,விவசாய போதனாசிரியர் த.பொ.மே நிறுவன பிரதேச இணைப்பாளர் மற்றும் கிராம மக்களும் கலந்துகொண்டனர்.(14)

# தவறானவழியில் சொத்துச் சேர்த்த முன்னாள் அமைச்சர் மீது விசாரணை!

## மேற்கொண்டும் நடவடிக்கை தொடர முடிவு

(கொழும்பு)

தவறான வழியில் சொத்துக்களைச் சம்பாதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொதுசன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டிஎம். ஜெயரத்ன விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஊழல் மோசடி ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 11ம் திகதி ஆணைக்குழு அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்ட அவர் விசாரணைக்குட்படுத் தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது சில தகவல்களை அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

மேற்கொண்டும் விசாரணைகளை நடத்தும் பொருட்டு பிறிதொரு தினத்தில் அவரை அழைத்து விசாரணைகளுக்குட்படுத்த ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, ரி.எம் ஜெயரத்னவின் சொத்துக்களின் அறிக்கைகளும் ஆணைக்குழு மூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# சிரமதானம்

(மன்னார்)

மன்னாரில் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் அரச அதிபருடன் இணைந்து அரசி யல் துறையினால் இன்று மன்னார் நகரில் மாபெரும் சிரமதானப்பணியை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ் ஏற்பாட்டை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் செய்துள்ளார். (மி)

# தவறவிடப்பட்ட தங்க நகை உரிமையாளரிடம் ஒப்படைப்பு

தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி ஒன்று மாணவன் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யோசேப்.கிங்ஸ்லி (யூனியன் குளம்) என்பவரினால் தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி அதே கிராமத்தைச் சேர்ந்த யூனியன்குளம் பாடசாலை மாணவன் சுப்பிரமணியம் திவாகரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு பெற்றோர்களால் யூனியன் குளம் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் கையளிக்கப்பட்டு பின்னர் அக்கராயன் அரசியல்துறைசெயலகத்தில் வைத்து பிரதேசப் பொறுப்பாளர் முன்னிலையில் நேற்று முன்தினம் காலை உரிமையாளரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இம்மாணவனின் நேர்மையைப் பாராட்டும் வகையில் நகை உரிமையாளர், யூனியன்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர்,கந்தபுரம் கமக்கார அமைப்பாளர் இம்மாணவனுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

# இளவரசி புடைவை மாளிகை

## இடமாற்றம்



புதுக்குடியிருப்பு சந்தியில் இயங்கி வரும்

இளவரசி புடைவை மாளிகை (விமல்ஸ்)

திருத்த வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் 16.06.03 திங்கள் முதல் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக இயங்கும் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

உரிமையாளர்,
இளவரசி புடைவை மாளிகை
புதுக்குடியிருப்பு.

(சி-7752)


## உபகரணங்கள் வழங்கல்

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் இரண்டு முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆறுமுகத்தான்குளம் சத்தியன் முன்பள்ளி, முறிப்பு பற்றீசியா முன்பள்ளி ஆகிய இரண்டு முன்பள்ளியில் உள்ள 75 சிறார்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மு.பொ.அ.நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ)

## சுழற்சிக் கடன் வழங்கல்

(முள்ளியவளை)

முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் முல்லைத்தீவு பிரதேசத்தில் 10 பயனாளிகளுக்கு சுழற்சிக் கடனாக 82500 ரூபாவினை வழங்கியுள்ளனர்.

மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இக்கடனானது வியாபாரத்திற்காகவும் சுயதொழில் முயற்சிக்காகவும் உழைப்பாளிகளை இழந்த விதவைகளுக்கும் வழங்கப்பட்டதாக இந்நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(ஆ)

## வேலைகள் தொடங்கப்படவில்லை

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கும் வற்றாப்பளை மகா வித்தியாலயத்திற்கும், உடையார் கட்டு மகாவித்தியாலயத்திலும் புதிதாக நூலகம் அமைப்பதற்காக 51 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்காக வழங்கப்பட்ட நிலையில் நீண்ட நாட்களாக எவ்வித பூர்வாங்க வேலைகளும் மேற்கொள்ளப்படாது இழுபறி நிலையில் உள்ளதாகவும் ஒப்பந்தக்காரரை சந்திக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஆ)


# 5 ஏக்கர் தென்னங்காணி கோள்வனவு செய்தல்

கற்சிலைமடு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லை. மாவட்ட சி.க.கூ.சமாசம் 5 ஏக்கர் தென்னங்காணியை முல்லை. மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொள்வனவு செய்யவுள்ளது.

அதனை விற்கத் தயாராக உள்ளோர் 2003.06.28 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ தங்கள் காணியின் அமைவிட சரியான முகவரியுடனும், காணியின் அளவு விற்கத்தயாராகவுள்ள விலை போன்ற விபரங்களுடன் எழுத்து மூலமாகவோ நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

தகவல்: மாவட்டச் செயலாளர்
சி.க.கூ.சமாசம்,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

(3232)



# அறிவமுது பொத்தகசாலை

## பணிநிலை வெற்றிடம்

**பணிநிலை - I : கணக்காளர்**

**தகைமை : க.பொ.த. (உ/த) (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)**

**பணிநிலை - II : முகாமையாளர், உதவியாளர்**

**தகைமை : க.பொ.த. (சா/த)**

**சம்பளம்** : நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிநிலைகளுக்கு தகைமை உடையவர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கும் **அறிவமுது பொத்தகசாலை** களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பம் முடிவுத்திகதி : 2003.06.30
ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
குறிப்பு: உணவு, தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

(சி-8163)


# 13ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில் -1972



தாயக மண்ணில் 16 - 06 - 1990

## கப்டன் பனா

### (தம்பிஐயா சசீந்திரன்)

பனா வீதி, கிளிநொச்சி.

*தமிழனின் மானம் காக்க புறப்பட்ட – வீரமறவனே*
*எமது தலைகளும் நிமிர்ந்தது*
*உனது தியாகத்தால்*
*இழப்பின் துயரம் நெஞ்சை வாட்டினும் இவ்வுறய நாளில்*
*உலகம் மதிக்கும் உனது வீரத்திற்குத் தலை வணங்குகின்றோம்.*

உன் நினைவோடு தினம் வாடும்
அன்புத்தாய், சகோதரர்கள்,
உறவினர்கள்.

(3327)

# ஓராண்டு நினைவு விழா



## திரு. சந்தியாப்பிள்ளை இராசநாயகம்

[வசாவிளான் / ஒட்டகப்புலம்]

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02-04-1922 | 16-06-2002 |

(i)
ஓராண்டு உருண்டதையா, உன் நினைவோ மறக்கவில்லை.
ஓ! என்று ஓலமிட்டு, கண்ணீர் வடிக்கின்றோமே தலைவா,
ஒட்டகப்புல ஆலயத்தில், இறைவனுக்காய் சேவை பல புரிந்தீரே
ஒத்தாசை நிற்பீரே, அமலோற்பவ அன்னையிடம்.

(ii)
பாடசாலையால் பிந்தி வரும், வேளையிலே அப்பா,
பரிதவித்து ஏங்கி, என் வரவை பார்ப்பீரே நீங்களும்.
படை எடுத்து இராணுவம், அழைத்துச் சென்றபோது,
பதை பதைத்து என்னுடன், துணையாக வந்தீர்களே.

(iii)
வாழ்க்கை வளம்பெற, கண்ணியமாக வளர்த்தீரே,
வாழ்வின் சிறப்பைக் காணாது, விண்ணுலகம் சென்றீரே.
வன்னியில் வந்து நோய் எடுத்து, மாண்டீரே அப்பா,
வையகத்தில் தந்தையென்று, அழைக்க யாருமில்லை.

(iv)
தந்தை அருகில் நான் நிற்கும், வேளையிலே மைந்தனை
தம்பி தம்பி என்று அழைத்து, உயிரை விட்டீரே.
தேம்பித் தேம்பி, விம்மி விம்மி, அழுதேனே அப்பா,
தரணியில் நான் இனி, அப்பாவைக் காண்பதெப்போ.

(v)
நேரான அன்புப்பார்வையையும், கல கலத்த சிரிப்பையும்;
நினைக்க நெஞ்சம் எரியுதையா, உள்ளமோ குமுறுதையா.
நேசமுள்ள துணையாள், சஞ்சலத்தால் தனித்து வாடுகின்றேன்,
நெக்குவிட்டு நெஞ்சமோ, பதை பதைத்து ஏங்குதே.

(vi)
நீங்கள் செய்த செயல்களும், சொல்லிய வார்த்தைகளும்,
நோயால் வருந்தும் வேளைகளில், புரிந்த தியாகச் செயல்களும்,
நினைக்குந் தோறும், ஆறாத்துயரம் பெருகுதே அப்பா.
நெஞ்சமோ துடிதுடித்து, வெடிக்குதே அப்பா.

(vii)
அன்புடன் அப்பா, நேசமாய் வளர்த்த என்னையும் மருமகனையும்,
அப்பப்பா என்று அழைத்த, நேசப் பேரப்பிள்ளைகளையும்,
அன்பாய்ப் பழகிய, உற்றார், உறவினர், அயலவர்களையும்,
ஆறாத்துயரம் கொண்ட, அம்மாவையும் பிரிந்து சென்றீரோ.

(viii)
மாதாவே! உம் மைந்தன், செய்த பிழை மன்னித்து
மண்டியிட்டுக் கேட்கின்றோம், தயவாக அன்னையரே,
மோட்ச இராட்சியத்தில், சேர்ப்பீரே விரைவாக,
மாண்புமிகு மன்னன் யேசு, அருகினிலே அமர;

திரு. இ.அமலன்,
தமிழீழ வைப்பகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

பாசமுள்ள மனைவி,
மகன், மருமகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

(சி-8201)

## சிந்தனைக்கு

இன ஒடுக்கு முறையாலும், இராணுவ அடக்கு முறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

**தமிழீழத் தேசியத்தலைவர்**



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-06-2003

## அரசாங்கத்தின் யுத்தநிறுத்த மீறல்

சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் மற்றுமொரு வர்த்தகக் கப்பல் சிறிலங்காக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. கரையோரத்தில் இருந்து 266 கடல் மைல் தொலைவில் வைத்து இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டமையானது அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த மீறல் மட்டுமல்ல, ஆத்திரமூட்டும் செயலுமாகும்.

சிறிலங்கா கடற்படையின் - அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆத்திரமூட்டும் செயல் என்பதில் சந்தேகம் கொள்வதற்கு எதுவுமே இல்லை. அத்தோடு, இச்செயலானது, சமாதான முயற்சிகள் குறித்து எந்தவித அக்கறையும் கொள்ளாது, சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் ஊடாக தாம் பலம் பெற்றுள்ளோம் என்பதனை சிறிலங்காக் கடற்படையும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் விடுதலைப்புலிகளுக்கு வெளிக்காட்ட முற்பட்டுள்ள நிகழ்வாகவுமே கொள்ளத்தக்கதாகும்.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர், திலக் மாரப்பன கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ள கருத்துக்கள், இந்நடவடிக்கைகளில் அரசாங்கமும்-- கடற்படையும் ஒரே தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளன என்பதையே வெளிக்காட்டியுள்ளது. மறுவளமாகக் கூறுவதானால் இவ் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைக்கு ரணில் அரசாங்கமும் அங்கீகாரம் வழங்கியிருந்ததெனலாம்.

அரசாங்கத் தரப்பு கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது கரையோரத்தில் இருந்து சுமார் 110 கடல் மைல் தொலைவில் இருந்ததாகத் தெரிவிக்கின்ற போதும், ஏற்கனவே வெளியாகியுள்ள கண்காணிப்புக் குழுவின் தகவல்களின்படி கடற்படையினர் குறிப்பிட்ட இடத்தில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கான தடயங்கள் எவையும் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இருப்பதாக இல்லை எனத் தெரிவிக்கின்றன. ஆகையினால், கப்பல் மூழ்கடிக்கப்பட்டதானது, சர்வதேச கடற்பரப்பிலோ இல்லையோ, சிறிலங்கா கடற்படையினர் கூறும் இடத்தில் இல்லை என்பதே உண்மையாகும். இதுவே உண்மைக்கு மாறான தகவலை கடற்படை வெளியிட்டது என்பதற்குப் போதுமான சான்றாகும்.

இது ஒருபுறம் இருக்க விடுதலைப்புலிகளின் கப்பலை ஒருமித்த கருத்தின் அடிப்படையில் அன்றி அரசாங்கத்தின் பணிப்பின் அடிப்படையில் மூழ்கடித்த கடற்படையும், அதற்குப் பணிப்புரை வழங்கிய பாதுகாப்பு அமைச்சும் கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பாக வெளியிடும் தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று முரணானவையாகவுள்ளன. இது, மூழ்கடிப்பதில் காணப்பட்ட ஒற்றுமை பொய் கூறுவதில் காணப்படவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

எடுத்துக்காட்டாக, வடபகுதிக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான கப்பல் ஒன்றை நிறுத்தும்படி கடற்படையினர் எச்சரிக்கை விடுத்திருந்த போதும், அவர்களின் எச்சரிக்கையை அக்கப்பல் உதாசீனம் செய்ததால் கடற்படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தி மூழ்கடித்தனர் எனப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டிருந்தார். அத்தோடு, கப்பலில் எந்த நாட்டுக் கொடியும் பறக்கவிடப்படவில்லை எனவும், கப்பலின் விபரங்கள் வெளியிடும்படி கடற்படையினர் கோரிக்கை விடுத்தபோதும் கப்பலில் இருந்து எந்தவித பதிலும் அளிக்கப்படவுமில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், கப்பல் தாக்கப்பட்டமை குறித்துச் சிறிலங்கா கடற்படைப் பேச்சாளர் ஜெயந்த பெரேரா தகவல் வெளியிடுகையில், கிழக்குக் கடற்பரப்பில் வைத்து புலிகளின் கப்பலைக் கடற்படையினர் தாக்கியபோதும் அதனை அவர்கள் மூழ்கடிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளதோடு, கப்பல் கடற்படையால் வழிமறிக்கப்பட்டபோது கப்பலின் பெயர் சோஷின் என்றும் பொலிசில் பதிவு செய்யப்பட்ட இக்கப்பல் சுரபியா துறைமுகத்தில் இருந்து புறப்பட்டதாகவும் கடற்படையினருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ் இருவரும் தெரிவித்திருக்கும் தகவல்களை அவதானிக்கும் எவருமே இவ்விரு தரப்பும் ஒன்றிற்கு ஒன்று முரணாகவும், உண்மைக்கு மாறாகப் பேச முற்படுவதனையும் புரிந்து கொள்ளமுடியும். அதாவது கப்பலைப் பொதுத் தீர்மானத்தின்படி தாக்கி அழித்துவிட்டு தமது அறிவிற்கும் விருப்பிற்கும் ஏற்ப விளக்கம், வரைவிலக்கணம் அளிக்க முற்பட்டுள்ளனர் என்பதையே இவர்களின் கூற்றுக்கள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இந்த வகையில் பார்க்கையில் விடுதலைப்புலிகளின் தரப்புத் தகவல்களைப் புறந்தள்ளி வைத்து விட்டுப் பார்ப்பினும் கூட கப்பல் மூழ்கடிப்பு விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகின்றது என்பதைப் புரிந்த கொள்ள முடியும். அதாவது சிறிலங்கா தரப்பினராலேயே உண்மைகள் வெளிவருவதைத் தடுத்து நிறுத்தி விடமுடியாமல் போய்விட்டது எனலாம்.

ஆனால், கடற்பரப்பில் சிறிலங்கா அரசாங்கமும் சரி, கடற்படையும் சரி மேற்கொள்ளும் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்ந்தும் நியாயப்படுத் தவும், நடவடிக்கைகளைத் தொடரவும் முற்படுவார்களேயானால், அது ஏற்கனவே நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அனுகூலமானதாக இருக்கப் போவதில்லை. மாறாக, அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறிய வகையில், ஆட்சியாளர்கள் யுத்தத்தை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள் என்ற சமிக்கையாகவே கொள்ள வேண்டியதாக இருக்கும்.

# கப்பல் மூழ்கடிக்கப்படும் அளவிற்கு கடற்படையின் தாக்குதல் இருக்கவில்லை

### கடற்படைப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்கு கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பலை கடற்படையினர் தாக்கினர். எனினும் அதை அவர்கள் மூழ்கடிக்கவில்லை என்று சிறிலங்கா கடற்படை பேச்சாளர் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து 110 கிலோ மீற்றர் தொலைவில் புலிகளின் கப்பல் கடற்பரப்பில் வழிமறிக்கப்பட்டது. அப்போது கப்பலின் பெயர் 'சோஷின்' என்றும் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட இந்தக் கப்பல் சுரபியா துறைமுகத்திலிருந்து புறப்பட்டதாகவும் கடற்படையினருக்குத தெரியப்படுத்தப்பட்டது. ஆனால் கடற்படையினரின் உத்தரவுக்குப் பணியமறுத்ததால் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கப்பல் தாக்கப்பட்டபோது அது வெடித்துச் சிதறும் அளவுக்கு கடற்படையினர் தாக்கவில்லை. அவ்வாறு மூழ்கடிக்கக் கூடிய ஆயுதங்கள் எதுவும் கடற்படைப் படகில் இருக்கவில்லை. நடுத்தர கலிபர் துப்பாக்கியாலேயே தாக்குதல் நடத்தப்பட்டது. காலை 6.00மணிக் குத் தீப்பிடித்த கப்பல் 8.40 மணியளவில் முற்றாக மூழ்கிவிட்டது. புலிகளின் கப்பலை கடற்படையினர் சோதனையிடவில்லை. அதற்கு புலிகள் அனுமதிக்கவுமில்லை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# பொ.ஐ.மு. அரசு காலத்தில் பதவியுயர்வை பெற்றோருக்கே இந்த அரசிலும் பதவியுயர்வு

### ஆட்சேபித்து நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் 82 பேர் பதவியுயர்வு பெற்றுள்ளனர் எனவும் இவர்கள் அரசியல் பழிவாங்கலுக்குள்ளானவர்களெனக் கூறியே பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்கள் அனைவரும் கடந்த பொ.ஐ.மு அரசு காலத்திலும் பதவி யுயர்வு பெற்றவர்கள் எனவும் இவர்கள் எந்த பழிவாங்கலுக்கும் ஆளாகவில்லை எனவும் தெரிவித்து நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

82 ஊழியர்களின் கையெழுத்துக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில் நீதிபதி, சங்கத்தின் தலைவர், முகாமையாளர் ஆகியோர் இதற்கு பொறுப்பாளிகளாக குறிப்பிடப்பட்டுளளது. 1994ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை அரசியல் பழிவாங்கலுக்குள்ளான சேவையாளர்கள் தொடர்பாக நிவாரணம் வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இவர்களுக்கே மீண்டும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவ்வாறானவர்களின் பதவியுயர்வை ரத்துச்செய்து சங்கத்தின் சட்டத்திட்டங்களுக்கேற்ப பதவியுயர்வுகள் வழங்க வேண்டும் எனவும் இது மனித உரிமை மீறல்செயலாகும் எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அரசியல் அழுத்தங்களால் பொலிசார் சுதந்திரமாக செயற்பட முடிவதில்லை

### தேசிய பொ. ஆணைக்குழுத் தலைவர் கருத்து

பொலிஸ் சேவையில் உயரதிகாரிகளை விட வீதிகளில் இரவு பகலாக மிகவும் சிரமத்துடன் சேவையாற்றும் கான்ஸ்டபிள்கள், சார்ஜன் தர ஊழியர்களே அரசியல் அழுத்தங்களால் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என தேசிய பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த அவல நிலையை மாற்றுவதற்கே கடந்த 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது எனக் கூறிய அவர், 13வது அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாற்றம் கொண்டு வந்ததையும் சுட்டிக்காட்டினார்.

அதில்" சனாதிபதியால் நியமிக்கப்படுவர்"என்பதற்குப் பதிலாக "அரசமைப்பு விதிகளின் கீழ் சனாதிபதியால் நியமிக்கப்படுவர் எனவும், சனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது"என்பது அரசியலமைப்பின் கீழ் சனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது" எனவும் "இருவர் பங்குபற்றுவர்" என்பது அரசியலமைப்பின் சிபாரிசுடன் சனாதிபதியால் நியமிக்கப்படுவார் எனவும் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் பொலிஸ் ஆணைக்குழு பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி நியமனங்கள் உயர்வுகள், மாற்றங்கள் என்பனவற்றுக்கு ஆணைக்குழுவே பொறுப்பாகும் எனவும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாகவும் பொலிசாரின் பயிற்சிகள் தொடர்பாகவும் ஆணைக் குழுவே நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் குறிப்பிட்டார்.

# ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க குழு

(கொழும்பு)

அம்பாறையில் ஒலுவில் என்ற இடத்தில் துறைமுகம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவென விசேட குழுவொன்றை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நியமித்துள்ளார்.

இத்துறைமுகத்திற்குத் தேவையான காணியை சுவீகரிப்பது தொடர்பாக காணியமைச்சருடன் தான் பேச்சுவார்த்தை நடாத்துவதாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இத்துறைமுகத்தை அமைப்பதற்கு 300 கோடி ரூபா செலவாகும் எனவும், டென்மார்க் அரசு இத்தொகையைத் தருவதற்கு முன்வந்துள்ளதெனவும் அவர் கூறியுள்ளார்.

# ஆசியக் கிண்ண தகுதிகாண் சுற்றில் சிறிலங்கா அணியும் இடம் பிடித்தது

2004 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் தகுதி காண் சுற்றுக்கு 28 அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை சிங்கப்பூரில் நடைபெறவுளளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற வலய அணிகளுக்கிடையிலான ஆரம்பச் சுற்றில் முதலிடம் பெற்ற அணிகள் தகுதிகாண் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அணி தாய்வான், கிழக்குத் தீமோர் அணிகளைத் தோற்கடித்து ஆசிய கிண்ணப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தகுதிகாண் போட்டிக்குத் தகுதி பெற்ற நாடுகள், பாகிஸ்தான், தாய்லாந்து, தஜிகிஸ்தான்,ஹொங்கொங், கட்டார், குவைத், பலஸ்தீனம், சிங்கப்பூர், சவுதிஅரேபியா, யேமன், இந்தோனேசியா, பூட்டான், ஈரான், ஜோர்தான், லெபனான், கொரியா, கொரியா குடியரசு,ஓமான், வியட்நாம், நேபாளம், ஈராக்,பஹ்ரைன், மலேசியா, மியான்மார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிரியா, துர்க்மெனிஸ்தான், இலங்கை.

## இந்திய அணிக்கு முதலிடம்

ஜேர்மனியின் கிரான்ஸ்பேட் நகரில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்திற்கான முதல் நிலை உலக யூனியர் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பட்டத்தை இந்தியாவின் சானியியாமிர்சா,சானா பௌர்னி இணை பெற்றுக்கொண்டது

ஜேர்மனியின் மறைன்கால்கின் ரஷ்யாவின் அல்லகுதிரியாஸ்சேவா இணையை இவர்கள் 6-1,6-0 என்ற நேர்செற் களில் தோற்கடித்ததன் மூலம் இப்பட்டத்தை பெற்றுக் கொண்டன.



### வடமராட்சிப்பகுதியில்

# படையினரின் வீதிச்சோதனை குறித்து கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் முறையீடு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியின் நுழைவாயில்களான வல்லை, முள்ளி மற்றும் பிற தடைமுகாங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமையாது நேற்றும், நேற்று முன்தினமும் படையினரால் மக்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் விடுதலைப்புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

சர்வதேச கண்காணிப்புக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக தற்போது நியமிக்கப்பட்டுள்ள கரீனா எரிக்ஸ்சன் அலுவலக கடமை ரீதியாக விடுதலைப்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியல் செயலகத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

அச்சமயமே விடுதலைப்புலிகளால் மேற்படி சம்பவம் தொடர்பாக எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன் படையினரின் மோட்டார் சைக்கிள் பிரிவின் அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் புலிகளால் கண்காணிப்புக் குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் தம்மிடம் உள்ள தொலைத் தொடர்புக்கருவிகள் அனைத்தும் முகமாலை சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்டு அனுமதியுடனேயே கொண்டுவரப்பட்டது எனவும், படைத்தரப்பால் கூறப்படுவது போல் தம்மிடம் அதி நவீன தொலைத் தொடர்புக்கருவிகள் எதுவும் இல்லை எனவும் கண்காணிப்புக் குழுவினரிடம் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதேதினம் தென்மராட்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் செயலகத்துக்கும் இவர்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (27)

# கப்பல் தாக்கப்பட்டதையடுத்து கொழும்பில் கடும் வீதிச்சோதனை

கொழும்பில்நேற்று முன்தினம் கடும் வீதிச் சோதனைகள் இடம்பெற்றதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது. விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து இவ்வாறு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரமுன்னர் இருந்தவாறு இச் சோதனை நடவடிக்கை இருந்ததாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

### கப்பல் மூழ்கடிப்பு தொடர்பாக

# தேசிய பாதுகாப்புச் சபையை சனாதிபதி கூட்டி ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் குறித்து சிறிலங்கா சனாதிபதி அவசரமாக தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டி ஆலோசித்துள்ளார்.

எக்காரணம் கொண்டும் சட்டவிரோதமான ஆயுதங்களை நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று நேற்று நடந்த இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோர் சமாதானச் சூழலைச் காரணம் காட்டி விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பிச் செல்ல முன்னர் அனுமதி வழங்கியிருந்தார்கள் என்றும் சனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

## கல்லடியில்...

இவர் நேற்று விடுமுறையில் கல்லடியிலுள்ள தமது வீட்டிற்குச் செல்வதற்காக அலுவலகத்திலிருந்து சென்று கொண்டிருந்த வேளை இனந்தெரியாத இரண்டு இளைஞர்கள் அவரை வீதியில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஈ.பி.டி.பி.யின் சார்பில் போட்டியிட இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மரண ஊர்வலத்தில் மோதல்; கல் வீச்சில் இருவர் படுகாயம்!

(வடமராட்சி)

வதிரிப்பகுதியில் மரணஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் கிராம மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் வதிரிப்பகுதியில் ஒருவரின் சடலம் இறுதிக்கிரியைக்காக அப்பகுதியில் உள்ள ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிலர், அருகில் உள்ள மது பான விற்பனை நிலயத்தில் மது அருந்திவிட்டு அப்பகுதியில் வசித்துவரும் சிறுவன் ஒருவனை மது போதையில் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு தமது கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் தாக்கப்பட்டதை அறிந்த மேற்படி கிராம மக்கள் திரண்டு சென்று மது போதையில் நின்றவர்களைத் தாக்கினர்.

இவ்வாறு தாக்கப்படுவதை அறிந்து மரணக்கிரிகையில் கலந்து கொண்ட ஏனையவர்களும் மோதலில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து இரு தரப்பினரும் கல்வீச்சிலும் ஈடுபட்டனர். சுமார் 400க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்ட இந்த மோதலில் சடலம் எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட சவ ஊர்தி வண்டில் முற்றாக அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அருகில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் உள்ள வீடுகள் சிலவும் சேதமாக்கப்பட்டுள்ளன. சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற கலாச்சாரத்தைப் பேணும் அமைப்பினர் இரண்டு தரப்பினரையும் எச்சரித்ததுடன் சம்பவ இடத்தில் இருந்து இரண்டு தாப்பினரும் கலைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் இருவர் படுகாயமடைந்ததுடன் பலர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## சம்பவங்கள்...

களின் எண்ணெய் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகக்கூறப்பட்ட இடத்திற்கு விமானப்படை விமானத்தில் நேற்று பிற்பகல் சென்று 2.30 மணியிலிருந்து எங்கள் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்ஒருவர்தேடினார். பொழுது சாயும் நேரம்வரை தேடியதில் எதையும் காணவில்லை என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி அக்னஸ் மேலும் கூறியுள்ளார். இதேவேளை, கடற்படை யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழுவிற்கு தகவல் தெரிவிக்காமையானது, அவர்களின் கூற்றுக்கள் குறித்துச் சந்தேகம் கொள்ளவைக்கின்றது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இத்தகவல்கள் குறித்து எழுந்துள்ள விமர்சனத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் கப்பல் கடற்படையால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாகத் தெரிவித்த சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுதலைப்புலிகளே கப்பலை வெடிக்கச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராளியின்...

அடையாள அட்டையை பலாத்காரமாக பறித்த படையினர் அவரது பையையும் பலாத்காரமாக பரிசோதிக்க முற்பட்டுள்ளனர்.

மேற்படி விடயத்தை அறிந்த விடுதலைப்புலிகளின் ஏனைய போராளிகள் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். விடயமறிந்த நூற்றுக்கணக்கான மக்களும் அப்பகுதிக்கு விரைந்து போராளியை விடுவிக்கக்கோரினர். எனினும் இவ் வாறு திரண்ட மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கம் செல்லாது படையினர் அவர்களைவழிமறித்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அந்தப் பகுதியூடாக பயணித்துக் கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தை வழிமறித்து அதில் இருந்த மக்களை இறக்கி விரட்டிய படையினர் அந்தப் பேருந்தை வீதிக்குக் குறுக்காக நிறுத்தி போராளிகளுக்கும், மக்களுக்கும் இடையே மறைப்பாக வைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் மேற்படி பகுதிக்கு 300க்கு மேற்பட்ட படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டு மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தை கலைக்கும் வகையில் நூற்றுக்கணக்கான பல சுற்றுக்களாக ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதன் பின்னர் அப்பகுதியில் குவிந்திருந்த மக்கள் மீது சிறிலங்காப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் பொதுமகன் ஒருவர் மண்டை பிளக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் ஏனையவர்கள் சிறுசிறு காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த கண்காணிப்புக்குழுவின் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட போது போராளி தனது பையை கண்காணிப்புக் குழுவினரிடம் பரிசோதனைக்காக ஒப்படைத்தார்.

கண்காணிப்புக் குழுவினரின் சோதனையின் பின்னர் மேற்படி பையில் சந்தேகத்துக்கிடமான எந்தப் பொருட்களும் காணப்படவில்லை என தெரியவந்தது.

இதேவேளை படையினரால் மக்கள் விரட்டியடிக்கப்பட்டபோது தாம் பயணித்த துவிச்சக்கர வண்டிகளையும் விட்டுவிட்டு மக்கள் ஓடியுள்ளனர். அவ்வேளை மக்களின் துவிச்சக்கர வண்டிகளை படையினர் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்ல முற்பட்டனர். அதனை ஆட்சேபித்து கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டதையடுத்து படையினரின் மேற்படி முயற்சி கைவிடப்பட்டது.

மேற்படி சம்பவங்களில் பல பொது மக்கள் காயமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற போதும் மேலதிக விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (27)

## மௌனம்...

நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல என்பதை உணர்த்தியதையும், உண்மையான பயங்கரவாதிகள் யாரென்ற உண்மையை வெளிப்படுத்திய முறையினையும் நாங்கள் அறிவோம்.

இதற்காக இந்தப் பதினாறு மாதங்கள் நீங்கள் சிங்கள அரசும் படைகளும் செய்த அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களையும், அழிப்பு நடவடிக்கைகளையும், இழக்கக்கூடாத இழப்புக்களையும் பொறுத்து மௌனமாக இருந்தீர்கள்.

இரத்தமும், கண்ணீரும் சிந்திக் காத்து வளர்த்து வந்த விடுதலைப் போரை இடைநிறுத்தி விட்டுக் கொடுக்க முடியாத, விட்டுக்கொடுக்கக்கூடாத இடங்களிலெல்லாம் விட்டுக்கொடுத்துப் பேசினீர்கள்.

ஆனால் சிங்கள அரசுப்படைகளும், ஏன் உலக நாடுகளும் கூட எமது இனத்தின் தன்மானத்தில் சுயகௌரவத்தில் சுதந்திர உணர்வில் கத்தி வைத்து விட்டார்கள். எங்களை ஏமாளிகளாக எண்ணிச் செயற்பட முற்பட்டு விட்டார்கள்.

நெடுந்தீவுக்கடலில் எமது போராளிகளின் உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்ட போது மௌனமாக இருந்தீர்கள்.

பண்பாட்டின் உயிர் நாடியாய், வீரத்தின் பிறப்பிடமாய் நின்ற எம் பெண் போராளிகளை சிங்களப்படை ஆடைகளைக் கிழித்து இடுப்புப் பட்டிகளை அறுத்து அவமானப்படுத்திய போதும் அமைதியாக இருந்தீர்கள். காஞ்சிரங்குடாவில் உங்கள் உயிராய் மதிக்கும் மக்களை அதிரடிப் படையினர் நாயிலும் கேவலமாய் சுட்டுக்கொன்ற போது பொறுமை கடைப்பிடித்தீர்கள்.

எமது விடுதலைப்போரின் முதுகெலும்பாய் வளர்ந்து நிற்கும் கடற்புலிப்படையின் கப்பலையும் அதில் பயணித்த கப்பல் கப்டன் சிலம்பரசன் உட்பட பதினொரு போராளிகளையும், சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கியழித்த போது சகித்துக்கொண்டிருந்தீர்கள்.

உங்கள் மௌனத்தை, அமைதியை, பொறுமையை, சகிப்பை சிங்கள அரசுப்படைகளும் புரிய மறந்தார்கள். புரியமறந்தது மட்டுமல்ல புரிந்துணர்வு உடன்படிக்கையையும், அமைதிக் காலத்தையும் பயன் படுத்தி எமது பலத்தின் ஆணிவேரில் கை வைக்கத் தொடங்கியுள்ளார்கள். அதன் வெளிப்பாடாகவே 14.06.2003 அன்று சனிக்கிழமை மீண்டும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எமது கப்பலையும் தாக்கி மூழ்கடித்து அதில் பயணித்த போராளிகளையும் கைது செய்துள்ளார்கள். இதற்கு மேலும் சர்வதேச சமூகத்திடமோ, சிங்கள அரசிடமோ, நீதியும், நியாயமும் வேண்டி நிற்கும் அளவிற்கு நீங்கள் இருக்கக்கூடாது. இதுவரை நீங்கள் காட்டிய பொறுமையும் விட்டுக் கொடுப்பும் போதும்.

மானமும், சுயகௌரவமும், இழந்த மக்களல்ல உங்கள் மக்கள். இலட்சியத்துக்காய் உயிரை துச்சமாக மதிக்கும் பிள்ளைகளைத்தான் நாங்கள் போருக்கு அனுப்பி வைத்தோம். இனியும் அனுப்பி வைப்போம். உங்கள் முடிவை மாற்றி இலட்சியப் பயணத்தின் பாதையைமீண்டும் புடம்போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பலமாய் நாங்கள் இருப்போம்.

"தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்"

## யுத்த நிறுத்த...

கொண்டுவரப்பட்டது. காலை 7.30 மணியளவில் P701,P331,P332, P341,P346 ஆகிய இலக்கங்களைக் கொண்ட சிறிலங்காக் கடற்படைப் படகுகள் எங்கள் கப்பலை நோக்கிவந்து 1000 மீற்றர் தூரத்திலிருந்தபடி தாக்குதலைத் தொடங்கின. சில நிமிட நேரத் தாக்குதலின் பின் கப்பலில் இருந்தோரை உயிர் காக்கும் படகுகளைப் பாவித்து கடற்படைக் கப்பலில் ஏறும்படி பணிக்கப்பட்டது. மாலுமிகள் இதற்கிணங்க நடந்தனர்.

நாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை இந்த இடத்திற்கு விரைந்து விசாரணை செய்வதுடன் எங்கள் உறுப்பினர்களைப் பாதுகாக்கும்படி கேட்டுக்கொண்டோம். இதன் பிரகாரம் சிறிலங்காக் கடற்படையின் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களை 110 கடல்மைல் தூரத்திலுள்ள கடற்பிரதேசத்திற்குக் கூட்டிச் சென்று அங்குதான் எங்கள் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதெனக் கூறியிருக்கின்றனர். அங்கு கப்பல் மூழ்கடிக்கப்பட்டமைக்கான தடயங்கள் எதனையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களால் காணமுடியவில்லை. கரையிலிருந்து 265 கடல்மைல் தூரத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எங்கள் கப்பலைத் தாக்கி மூழ்கடித்துவிட்டு 110கடல்மைல் தூரத்தில் தான் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதெனவும் சர்வதேசக்கடற்பரப்பில் அல்லாது தங்களுடைய கடலாதிக்கப்பகுதியில்தான் நடைபெற்றிருக்கிறது என்ற புனைகதையை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை நம்பவைக்க முயன்றிருக்கின்றார்கள். சிறிலங்கா கடற்படையின் வாதத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதாயினும் அங்கு இன்னொரு முக்கிய விடயத்தை கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது. தாக்குதலைத்தொடங்கு முன்னரே சிறிலங்கா கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் கொடுக்கவில்லை என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயமாகின்றது. இவை எல்லாவற்றிலிருந்தும் துல்லியமாகப் புலனாவது என்னவெனில், முன்பு மார்ச் 2003 இல் நடந்தது போலவே சிறிலங்கா கடற்படையினர் சம்பவம் நடந்த பிரதேசத்தை தாக்குதலை நியாயப்படுத்துவதற்கு வாய்ப்பாக மாற்றியிருக்கிறார்கள் என்பதே.

இந்தப் பொய்மையை நாம் அறிந்த காரணத்தால் உண்மையாகச் சம்பவம் நடந்த இடத்தை துல்லியமாக விளக்கும் விதத்திலான பாகை எண்ணிக்கையில்(1147N.8431E) காட்டியிருந்தோம். இதன்படி சிறிலங்காக் கடற்படை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களை சம்பவம் நடந்த இடத்திற்குக் கூட்டிச் செல்வதாகக் கூறி தங்கள் கலத்தில் ஏற்றிச் சென்றிருக்கின்றனர். பாதி வழியில் கடல்கொந்தளிப்பு எனக் காரணம்கூறி இந்த இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லாமல் திரும்பியுள்ளனர். ஓர் எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடத்தில் சாதாரணமாக எதிர்பார்க்கக்கூடிய கடலில் மிதக்கும் எண்ணெய்க்கசிவு தங்களைக் காட்டிக்கொடுத்துவிடுமென்ற அச்சத்தினால் போலும் அந்த இடத்திற்குக் கூட்டிச் செல்லாமல் தாமதத்தை ஏற்படுத்தினால் எண்ணெய்க்கசிவு அகன்றுவிடும் என்ற உள்நோக்கத்துடன் பயணத்தை இடைவழியில் நிறுத்தித் திரும்பியிருக்கிறார்கள். உண்மையில் சிறிலங்காக் கடற்படையினர் தடயத்தை மறைக்கும் ஓர் உத்தியைக் கையாண்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை ஏமாற்றியிருக்கிறார்கள்.

சிறிலங்காக் கடற்படையினர் சர்வதேசக் கடற்பரப்பில் சர்வதேசக் கடற்சட்டங்களை மீறும் விதத்தில் எமது கப்பலைத் தாக்கியழித்தது, சம்பவம் 110 கடல்மைல் தூரத்தில் நடந்தது என ஓர் கதையைப் புனைந்தது, எங்கள் போராளிகளை சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றுவிட்டு அதனை மறுப்பது, தடயங்கள் அழிந்துபோவதற்காக தாமதிக்கும் உத்தியைக் கடைப்பிடித்தது போன்ற தான்தோன்றித்தனமான செயல்கள் குறித்து எங்கள் பலமான எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புகிறோம். எங்கள் கலத்தைச் சட்டவிரோதமாகத் தாக்கியழித்தமைக்கும் எங்கள் போராளிகளைக் கடத்திச் சென்றமைக்கும் சிறிலங்காக் கடற்படையே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனக்கூறும் அதேவேளை, மேலே விபரிக்கப்பட்டிருக்கும் பகைப்புலனின் அடிப்படையில் அர்த்தமுள்ள விசாரணைகளை உடனடியாகத் தொடங்கி எங்கள் போராளிகளின் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலை மிகவிரைவாக எங்களுக்குத் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சிறிலங்காக் கடற்படையினர் சமாதானமுயற்சிகளை குலைப்பதற்கான ஓர் சதித்திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களென நாம் அச்சங்கொள்வதுடன் அவர்களது நடவடிக்கை காரணமாக எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு சிறிலங்காக் கடற்படையே பொறுப்பேற்கவேண்டுமென உங்களுக்குக் கூறக் கடமைப்பட்டுள்ளோம். இந்தச் சம்பவத்தின் காத்திரத்தையும் எங்கள் போராளிகளின் உயிர்பாதுகாப்பு தொடர்பான எங்கள் கரிசனையையும் கருத்திற்கொண்டு இது தொடர்பாக விரைவான பதிலொன்றைத் தரும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.